எம்.சி.ஓ.பி எண்: 1364/2024 தேதி: 27.02.2026

மசா. : 1

பெயர் :வி.குமார்

த/பெ. : வினாயகம்

வயது : 62

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 12 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்காததால் யாருடைய அஜாக்கிருதையால் விபத்து நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரி. விபத்து நடந்த சாலை 4 வழி சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் சாலையின் தடுப்புச்சுவர் உள்ளது. வண்டி எல்லாம் வேகமாக வரக்கூடிய பகுதி என்றால் சரிதான். சாலையை கடப்பவர் வாகனங்கள் வருவதை பார்த்துதான் கடக்க வேண்டும். அந்த சாலையில் பாதசாரிகள் கடப்பதற்கு இடம் உள்ளது என்று காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னுடைய மனைவி பாதசாரிகள் கடக்கவேண்டிய இடத்தில் சாலையை கடக்காமல் வேறு இடத்தில் சாலையை கடந்ததால் அவருடைய கவனக்குறைவு காரணமாக விபத்து நடந்தது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி தையல் வேலை செய்கிறார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை எ்னறால் சரி. விபத்தில் ஈடுபட்ட வாகனம் உரிய ஆவணங்கள் இல்லை என்பதால் அந்த வாகனத்தின் உரிமையாளரிடமிருந்துதான் இழப்பீடு கேட்கவேண்டும் என்றாலும் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த பொறுப்பு இல்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.